கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், 77 'அ' வட்டம், புளியந்தோப்பு, மோதிலால் தெருவில் நடந்த நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

முதல்வர் பிறந்தநாள்: எழும்பூர் தொகுதியில் 2வது நாளாக

1,600 பேருக்கு அறுசுவை உணவு - நல உதவிகள்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., வழங்கினார்!

சென்னை,மார்ச்.5-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 73ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதன் இரண்டாம் நாள் நிகழ்வாக, 77, 77 'அ', 78 மற்றும் 78 'அ' வட்டங்களுக்கு உட்பட்ட நான்கு இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் மாணவர்கள், பொதுமக்கள் என 1,600 பேருக்கு அறுசுவை மதிய உணவும் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிக்கு நலத்திட்ட உதவிகளும் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

78வது வட்டம், கொசப்பேட்டை, நியூ மாணிக்கம் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி உண்டு உறைவிடப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் அப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்கு அறுசுவை மதிய உணவோடு, அப்பள்ளிக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, மிளகாய், தனியா, ரவை, சேமியா, நெய், முந்திரி உள்ளிட்ட 32 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் மாணவர்களுக்குப் போர்வை ஆகியவை வழங்கப்பட்டன.

78 'அ' வட்டம், சூளை, அங்காளம்மன் கோவில் தெரு; 77 'அ' வட்டம் புளியந்தோப்பு, மோதிலால் நேரு தெரு; 77வது வட்டம், டிமலஸ் சாலை, P4 காவல்நிலையம் அருகில் ஆகிய மூன்று இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு இடத்திலும் 500 பேருக்கு என அப்பகுதிகளைச் சேர்ந்த 1,500 பேருக்கு அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே. சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 77வது வட்டப் பகுதிப் பிரதிநிதி எஸ்.முனுசாமி, 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜான்சிராணி, தலைமைக் கழகப் பேச்சாளர் சூளை நேரு, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், எட்டு (எ) எஸ்.விஜயகுமார், சரவணன், கோமகன், 77 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 77 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தன பிரபாகரன், ச.சூர்யா; 78வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வேலன், ஜெகன், 58வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 61வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நித்திஷ் கிரிதரன், 99 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குணா, பாக முகவர்கள் கவிதா, கார்த்திகேயன், ரமேஷ்குமார்; வழக்கறிஞர் நேரு பிரபாகரன், பன்னீர் செல்வம், ஆதி.அசோக், பாளையம், சசிகுமார், குமாரசாமி, ரவி, மு.கு.சு. அமோஸ், எஸ்.பிரகாஷ், திவாகர், மணி, எம்.வெங்கட், வேலு, ரோஷன், ஒய். இருதயராஜ், எஸ்.சத்யநாதன், டி.பாண்டியன், பி. கோவிந்தன், பி.சேகர், பி.ஏழுமலை, ஜி.மாரி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கழகச் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் இருந்து சென்னை திரும்பும் வழியில் செஞ்சி அருகே சத்தியமங்கலம் என்ற பகுதியில் ஏற்பட்ட விபத்தில் அகால மரணமடைந்த ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் ஒன்றியத்தை சேர்ந்த கபடி வீரர்களான தம்பிகள் வினோத், ராஜா, ஜெயின், சேகர் ஆகியோரின் இல்லத்திற்கு குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் உள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.இராஜசேகர் தலைமை!

துறைமுகம் கிழக்குப் பகுதியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்: மாபெரும் புகழரங்கம்!

கி.வீரமணி, செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ, வாழ்த்துரை!

சென்னை,மார்ச்.5-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் கிழக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 34", மானமும் அறிவும் மகத்தானது! மனிதமே திராவிட மாடலானது!! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 06.03.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, தம்புச்செட்டி தெரு, மண்ணடியில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் றைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.இராஜசேகர் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முரளி, இரா. நரேந்திரன், எம். விஜயகுமார், ஜி.மகாதேவன், பி.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, என். பி.எம்.சேக் அப்துல்லா, எம். இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், நா.ரஞ்சித் விஜயாலயன், வெ.பரிமளம் எம்.சி, எல்.நவீன் எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி, ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.பெ.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார். வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர். எ. அஸ்லாம், த.கதிரவன், ம.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம்.வே.பா.பிரகாரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் தலைவர் - திராவிடர் கழகம் ஆசிரியர்.கீ.வீரமணி, தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி - திரு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, தலைவர்மனிதநேய மக்கள் கட்சி - பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா எம். எல்.ஏ, ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.பி, தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம். எல்.ஏ, மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் ஆ.நா.பாத்திபன், க.கவியரசு நன்றி கூறுகிறார்கள்.

விருகம்பாக்கம் தொகுதி

கலைஞர் நகர் வடக்கு - தெற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் மு.ராசா – கே. கண்ணன் அறிக்கை!

சென்னை,மார்ச்.5-

கலைஞர் நகர் வடக்கு - தெற்குப் பகுதிச் செயலாளர்கள் மு.ராசா - கே. கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சியில் மார்ச் 9 ம் தேதி நடைபெற உள்ள மாபெரும் மாநாட்டை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் அண்ணன் திரு #மா_சுப்ரமணியன் அவர்கள் ஆலோசனைபடி, விருகம்பாக்கம் தொகுதி கலைஞர் நகர் வடக்கு - தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (05.03.2026 வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு ஆற்காடு சாலையில் உள்ள வடக்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது. பகுதி அவைத்தலைவர்கள் எஸ். உமாபதி, கமலக்கண்ணன் தலைமையில், விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.எம்.பிரபாகரராஜா, கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தகரணி செயலாளர் அண்ணன் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் அந்தந்த பகுதிக் குட்பட்ட மாவட்ட பகுதி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், கண்டிப்பாக கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தண்டையார்பேட்டை மண்டலத்தில் ரூ. 1.29 கோடி மதிப்பீட்டில்

இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

மேயர் ஆர்.பிரியா நேரில் பார்வையிட்டார்!

சென்னை,மார்ச்.5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (04.03.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட, காமராஜ் நகர் 2வது தெருவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 1.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையத்தினை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, மேயர் திருமதி ஆர்.பிரியா , நேரில் சென்று பார்வையிட்டு இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி வழங்குவது குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இளஞ்சிறார்களுக்கான ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் (Early Intervention Centre - EIC) என்பது 0-6 வயது குழந்தைகளில் காணப்படும் வளர்ச்சிதாமதங்கள், பிறவிக்குறைபாடுகள், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் மற்றும் நோய்களை மிக ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிறப்புச் சிகிச்சை அளித்து பூரணகுணமடைய செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை ஆரம்ப கால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையத்தை உருவாகியுள்ளது. ஆரம்பகால கண்டறிதலும், சரியான நேரத்தில் வழங்கப்படும் சிகிச்சையும் மாற்றுத்திறன்களின் தீவிரத்தைக் குறைத்து, குழந்தைகளின் மொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்த உதவுகிறது.

இளஞ்சிறார்களுக்கான ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையத்தில்

"4 D's" எனப்படும் பிறவிக் குறைபாடுகள் (Defects), ஊட்டச்சத்து குறைபாடுகள் (Deficiencies), நோய்கள் (Diseases), மற்றும் வளர்ச்சி தாமதங்கள்/மாற்றுத்திறன்கள் (Developmental delays) ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஏற்படுத்தப்படும் மையமாகும் சிகிச்சை, ஆலோசனை மற்றும் பரிந்துரை போன்ற பல்துறை சேவைகள் இம்மையத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும், இம்மையத்தில் பிறப்பு முதல் 6 வயது வரை குழந்தைகளின் 4 வகையான குறைபாடுகளுக்கான பரிசோதனை, குறிப்பிட்ட உடல் நலக்கோளாறுகளை ஆரம்ப காலத்திலேயே கண்டறிதல், முழுமையான உடல் நிலை மதிப்பீடு, பரிசோதனை, நோயறிதல், மருத்துவ சேவைகள், செயல்முறை சிகிச்சை, உளவியல் சேவைகள், ஒளியியல் சேவைகள், பேச்சு-மொழி சிகிச்சை, கண் பார்வை சேவைகள், ஆய்வக சேவைகள், உளவியல் - சமூகவியல் சேவைகள் மற்றும் பரிந்துரை சேவைகள், தொடர் கண்காணிப்பு சிகிச்சை, தேவையான அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும்.

இந்த சிறப்பு வாய்ந்த இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப கால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரங்களில் விரைவில் துவங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் திருமதி எஸ்.சர்வஜெயாதாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு மற்றும் நிதி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் திரு.நேதாஜி யு.கணேசன், மண்டல அலுவலர் திரு.ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. அறிவிப்பு!

சென்னை, மார்ச். 05 -

வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (05.03.2026 - வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர் 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக் குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் 73வது பிறந்தநாள் முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62அ வட்ட கழக சார்பில் 1000பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியினை பகுதி கழக செயலாளர் மண்டலக்குழு தலைவருமான எஸ். மதன்மோகன் எம்.சி. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மகளிர் அணியினர் இளைஞர் அணியினர் பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

திருவொற்றியூர் மேற்குப் பகுதி

வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

எஸ். மோகன் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் தலைமை!

சென்னை,மார்ச்.5-

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அவர்களின் வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் வட்டக் கழக செயலாளர் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான

தி. நகர் எஸ்.மோகன் அவர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள் தாசன் ஏற்பாட்டில் பகுதி கழக நிர்வாகிகள்,

வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம். 432026 புதன்கிழமை காலை 11:00 மணியளவில் ராமகிருஷ்ண நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் " வெல்லும் தமிழ் பெண்கள் "பரப்புரை விரைவாக களப்பணியாற்றி முடிக்க வேண்டும் என்ற தீர்மானிக்கப்பட்டது. மேலும் 942026 அன்று திருச்சியில் நடைபெறும் "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் " நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்றும், அதற்கான வாகன வசதிகளை பகுதி கழகம் சார்பில் ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

தொடர்ந்து திராவிட மாடல் 2.0 அமைய அயராது பாடுபட வேண்டும்

என்று உறுதி ஏற்க்கப்பட்டது.

இந்நிகழ்வில் பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர்கள் மு. சிவக்குமார், டி.சேகர்., கே.பவுல் . கே.பி. சொக்கலிங்கம் எம். சி, கி. கண்ணன் எக்ஸ். எம் சி, சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வீ. தியாகராஜன், ஆர்.மோகனசுந்தரம், மாவட்ட பிரதிநிதிகள் எம் சந்திர குமார் , ந. ராம்குமார், எஸ்.கணேஷ், எஸ். ஆர். மலைராஜ், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆர்.நவகுமார் , தழவை எஸ். ரஞ்சித் , வை. ம. கண்ணதாசன், டி. சக்கரவர்த்தி , மு. கார்த்திக் , வி.கோபால், எஸ். ரமேஷ், ஆர். எம்.செல்வம், எஸ். ராஜேஷ் , எஸ்.சேதுபதி, எஸ்.வினோத், ஜெ. விக்னேஷ் , சாமுண்டீஸ்வரி, பூங்கொடி, வனிதா, புனிதா, பிரியா, மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

படப்பை ஆ.மனோகரன் ஆலோசனை வழங்கினார்!

குன்றத்தூர் மத்திய ஒன்றியக் கழகக் செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியப் பொறுப்பாளர் ஏ.மணி தலைமை!

காஞ்சிபுரம். மார்ச். 5-

குன்றத்தூர் மத்திய ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம் நேற்று (04.03.2026 புதன்கிழமை) காலை 11 மணி மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ. மணி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருபெரும்மந்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம். தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் சரஸ்வதி மனோகரன் (ஒன்றிய பெருந்தலைவர்). ஏ. வந்தே மாதரம் (வடக்கு ஒன்றிய செயலாளர்). உமா மகேஸ்வரி வந்தே மாதரம் (ஒன்றிய குழு துணை தலைவர்). ஒன்றிய குழு நிர்வாகிகள் மு.சுப்பிரமணி. க.ஏழுமலை. மு. செல்வமணி. எம்.வாசுகி. மகேஷ். வே.ஹரி. மா.பரிமேலழகன். கே.என்.சி. சத்தியமூர்த்தி. இ.விஸ்வநாதன். பா.அறிவொளி. மா.சே.பிரகாஷ். பொன் இளையபாரதி. எம்.பாலாஜி. பூ.ஜெகன் மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மார்ச் 9 திருச்சி மாநாடு வெல்லும் தமிழ் பெண்கள் 2026 தேர்தல் பணி கழக வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 16 வது வட்டம் ஆண்டார்குப்பம் சென்னை நடுநிலைப் பள்ளியில் உள்ள மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. வட்ட செயலாளர் இ. கண்ணப்பன் முன்னிலையில் கே சிவசங்கரன் நா. மோகன் குமார், என். மகேஷ் குமார், எலந்தனூர் வி. சிவபிரகாஷ், எஸ். மஞ்சுநாதன், கடப்பாக்கம் நீதி, பழையநாபாளையம் தசரதன், வழக்கறிஞர் எம். என். தளபதி, ஷாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.